15.04.2024 அ.வ. எண். 182/2019 வா.சா. 1 செல்வராஜ்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அக்கப்ப நாயுடுவின் மூத்த மகள் சரோஜினி அம்மாள் வடதிண்ணலூர் மதுரா, பரியம்பாடி கிராமத்தில் வசித்துவந்தார் என்று சொன்னால் சரிதான். அக்கப்ப நாயுடுவின் இளைய மகள் சகுந்தலா அம்மாள் மாளிகைப்பட்டு கிராமத்தில் வசித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். சகுந்தலா அம்மாள் என்னுடைய தாயார். அக்கப்ப நாயுடு என்னுடைய தகப்பனாரை வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அக்கப்ப நாயுடு எஸ்.எஸ்.எல்.சி., வரை படித்திருந்தார். அக்கப்ப நாயுடு நெல் அரவை மில் வைத்திருந்தார். அக்கப்ப நாயுடு செய்யாறு வட்டார அரவை மில் தலைவராக இருந்தார் என்றால் தெரியாது. அக்கப்ப நாயுடு மகள் சரோஜினி அம்மாளுக்கு தில்லைக்கரசி, எழிலரசி, குப்பன் (எ) காசி விஸ்வநாதன், இளங்கோவன், சாந்தி, தமிழரசி ஆகியோர்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். என் தாயாருக்கு ஞானாம்பாள், ராமமூர்த்தி, நான், விஜயலட்சுமி ஆகியோர்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். ராமமூர்த்தி எனக்கு மூத்தவர். ராமமூர்த்தி 25.09.1994 ஆம் தேதி இறந்துவிட்டார். ராமமூர்த்தி வாரிசு சான்று வாங்கினேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ராமமூர்த்தி இறந்தபோது என்னுடைய தாயார் உயிருடன் இருந்தார். ராமமூர்த்திக்கு என் தாயார் மட்டும் தான் வாரிசு என்று சொன்னால் தவறு, ஞானாம்பாள், விஜயலட்சமி, செல்வராஜ், சகுந்தலா அம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். என் தாயார் மட்டும் தான் ராமமூர்த்திக்கு வாரிசு என்றும், மற்றவர்கள் ராமமூர்த்தியின் உடன்பிறந்த சகோதரிகள், சகோரர் என்று சொன்னால் தவறு. சரோஜனி அம்மாள் மூத்த மகன் குப்பன் (எ) காசி விஸ்வநாதன் 28.03.2012 ஆம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவி கீதா 16.08.2012 ஆம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். குப்பன் (எ) காசி விஸ்வநாதனுக்கு சரோஜினி அம்மாள் மட்டும் தான் வாரிசு என வாரிசு சான்று வாங்கியுள்ளார்கள் என்றால் தெரியாது. குப்பன் (எ) காசி விஸ்வநாதனுக்கு உடன் பிறந்த சகோதரர், சகோதரிகள் உள்ளார்கள். அவர்கள் 2ம் வகுப்பு வாரிசுகள் என்பதால்

அவர்களை வாரிசு சான்றில் சேர்க்கவில்லை என்று சொன்னால் தெரியாது. என் தாயார் சகுந்தலா அம்மாள் 04.11.2008 ஆம் தேதி இறந்தார் என்றால் சரிதான். அக்கப்ப நாயுடு மனைவி பெயர் ஜெகதாம்பாள், அவர் பெயரில் சொத்துக்கள் உள்ளது. ஜெகதாம்பாள் பெயரில் அகத்தேரிப்பட்டு கிராமத்தில் மட்டும் சொத்து உள்ளது. அகத்தேரிப்பட்டு கிராமத்தில் உள்ள சொத்து முழுவதும் ஜெகதாம்பாள் பெயரில் வாங்கியது தான். அகத்தேரிப்பட்டு கிராமத்தில் உள்ள சொத்துக்கள் ஜெகதாம்பாளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் தவறு. ஜெகதாம்பாள் அக்கப்ப நாயுடு இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார். ஜெகதாம்பாள் இறந்தபோது அவர் பெயரில் இருந்த சொத்துக்கள் குறித்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜெகதாம்பாளுக்கு சரோஜனி அம்மாளும், சகுந்தலா அம்மாளும் தான் வாரிசுகள் என்று சொன்னால் தவறு. ஜெகதாம்பாள் இறந்தபிறகு அவருடைய சொத்தை அவருடைய மகள்களான சரோஜனி அம்மாளும், சகுந்தலா அம்மாளும் தான் அடைந்தார்கள் என்று சொன்னால் தவறு. சரோஜனி அம்மாள், சகுந்தலா அம்மாள் இருவர் பெயருக்கும் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. ஜெகதாம்பாள் சொத்தில் அவருடைய மகளான சரோஜனி அம்மாளுக்கு பாகம் உண்டு. அந்தவகையில் சரோஜினி அம்மாள் சொத்தை அடைந்து அனுபவித்து வந்தார் என்றும், அதை யாரும் தடுக்கமுடியாது என்று சொன்னால் சரிதான். சரோஜினி அம்மாள் அந்தவகையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதிக்கு 14.05.2014 ஆம் தேதி கிரயம் செய்துகொடுத்தார் என்று சொன்னால் தவறு. அதை ஆட்சேபிக்கவும், வினா எழுப்பவும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சரோஜினி அம்மாள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் அவரின் வாரிசுகள் அந்த கிரய ஆவணத்தில் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அக்கப்ப நாயுடு அவருடைய மூத்த மகள் சரோஜினி அம்மாளுக்கு உயில் எழுதிவைத்து அக்கப்ப நாயுடு இறந்தபிறகு உயில் நடைமுறைக்கு வந்து சரோஜினி அம்மாள்

வா.சா.ஆ.12 கிரய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ.12 ல் பக்கம்-2ல் பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக 3 புத்தகம் 25/1994 ஆம் எண் ஆவணமாக பதிவு செய்துவிட்டு அவர் இறந்தபிறகு மேற்படி உயில் சாசனத்தில் எ ஷெட்யூல் சொத்து அடிப்படையில் எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டு நான் அனுபவித்து வரும் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கப்ப நாயுடு 1997 ஆம் ஆண்டு இறந்தார். உயில் குறித்து எனக்கு தெரியும். அக்கப்ப நாயுடு அவருடைய பேரன் பேத்திகளுக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்றும், நானும், என் சகோதரி விஜயலட்சுமியும் சொத்துக்களை விற்பனை செய்யாமல் வைத்துள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் செங்கம்பூண்டி கிராமத்தை சேர்ந்த முத்து, மணி, ரகு, ரஜினிகாந்த் ஆகியோர்களுக்கு 29.07.2000 தேதி ஆவண எண். 934/2000, 40 சென்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். சரோஜினி அம்மாள் மகள்களான தில்லைக்கரசி, எழிலரசி, சாந்தி, தமிழரசி ஆகியோர்கள் வா.சா.ஆ.11 கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.வா.சா.ஆ.11 கிரய ஆவண சொத்தை சரோஜினி அம்மாள் மகள்களான தில்லைக்கரசி, எழிலரசி, சாந்தி, தமிழரசி ஆகியோர்கள் விற்பனை செய்யவில்லை என்றும், நானும் என் தகப்பனாரும் மிரட்டி சொத்தை எந்த காலத்திலும் அனுபவிக்க முடியாது என்று சொல்லி கிரயம் ஆவணம் எழுதிவாங்கி கிரய பணத்தை நாங்களே வாங்கிக்கொண்டோம் என்று சொன்னால் தவறு. அக்கப்ப நாயுடு அந்த காலத்திலேயே வெளி வட்டாரங்களை நன்கு அறிந்தவர் என்று சொன்னால் சரிதான். அக்கப்ப நாயுடு என் தகப்பனாரை தான் வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக்கொண்டார் என்றும், அக்கப்ப நாயுடு எப்போதும் எங்கள் வீட்டிற்கு வந்ததில்லை என்று சொன்னால் என் தகப்பனார் தான் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்தார். அக்கப்ப நாயுடுவை அடித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதவைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கொடுத்த தொந்தரவின் காரணமாக தான் அக்கப்ப நாயுடு பாகப்பிரிவினைக்கு பிறகும் நாங்கள் சொல்லியதுபோல்

ஆவணங்கள ் எழுதினா ் என்று சொன்னால ் தவறு. பாகப்பிரிவினை ஆவண எண்.460/1958ன் படி தான் அக்கப்ப நாயுடுவிற்கு சொத்துக்கள் வந்தது. அக்கப்ப நாயுடுவும், அவருடைய அண்ணன் ் மகன்களும ் சேர்ந்து ஆவண எண்.460/1958ன ் படி பாகம ் செய்துகொண்டுள்ளார்கள். மேற்சொன்ன ஆவண சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துக்களையும் எங்களுடைய தொந்தரவு காரணமாக அக்கப்ப நாயுடு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் தவறு. அக்கப்ப நாயுடு எனக்கு 3 செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதிவைத்தார், அவைகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அக்கப்ப நாயுடு 17.08.1993 ஆம் தேதி ராமமூர்த்தி, செல்வராஜ் ஆகியோர்களுக்கு செட்டில்மெண்ட ் ஆவணம ் எழுதியுள்ளார். மேற்சொன்ன ஆவணத்தில் அக்கப்ப நாயுடுவிற்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் அல்லாமல் வேறு சொத்துக்களையும் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தையும் பாகப்பிரிவினை சொத்துக்கள் அல்லாமல் வேறு சொத்துக்களையும ் எழுதியுள்ளா ் என்று சொன்னால ் தவறு. வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும், உயில் சாசனத்திற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.